# திருப்புதல் தேர்வு - 1
## இயல் (1-4)

வகுப்பு : 12 மதிப்பெண் : 90
பாடம் : தமிழ் நேரம் : 2.30

**I.பலவுள் தெரிக** **14 x 1 = 14**

1. சங்கப் பாடல்களில் ---------- முக்கியமான ஒரு பண்பு
அ) ஒலிக்கோலம் ஆ) ஒலிபெயர்ப்பு இ) ஒலிச்சேர்க்கை ஈ) ஒலிப்பின்னல்

2. நீர்படு பசுங்கலம் - எனப் பாடும் நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) புறநானூறு ஈ) தொல்காப்பியம்

3. எதிர்கால இடைநிலை பெறும் சொல் எது?
அ) வியந்து ஆ) விம்முகின்ற இ) இருந்தாய் ஈ)சாய்ப்பான்

4. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்து ----
அ) வல்லினம் ஆ) மெல்லினம் இ) இடையினம் ஈ) ஆய்தம்

5. அணியிலக்கணத்தையும் கூறும் நூல்
அ) வீரசோழியம் ஆ) குவயானந்தம் இ) மாறனலங்காரம் ஈ)தண்டியலங்காரம்

6 புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே என்றவர் -----
அ) ஜான் டேவிட் ஆ) ஜார்ஜ் மிலி இ) எடிசன் ஜாய் ஈ) டேவிட் கிங்

7. வங்கக் கடலிலும் அரபிக் கடலிலும் உருவாகும் புயல்களுக்கு பெயர் வைக்கும் நாடுகள் எத்தனை?
அ) 8 ஆ) 5 இ) 3 ஈ) 7

8. நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன்
அ) நெடுஞ்செழியன் ஆ) செங்குட்டுவன் இ)கரிகாலன் ஈ)சுந்தரபாண்டியன்

9. உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே அஃறிணை என்மனார் அவரல பிறவே - இடம்பெற்றுள்ள நூல்
அ) நன்னூல் ஆ) தண்டி இ) தொல்காப்பியம் ஈ) குவலயானந்தம்

10. குடும்பம் என்ற சொல் முதன் முதலில் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ)திருக்குறள் ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) குண்டலகேசி

11. நாம் முயற்சி செய்வோம் ---------
அ) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை ஆ) உளப்பட்டுத் தன்மைப் பன்மை
இ) ஒருமை பன்மை ஈ) தன்மை படர்க்கை

12. குடம்பை என்ற சொல் சங்க இலக்கியங்களில் எத்தனை இடங்களில் இடம் பெற்றுள்ளன.
அ) 22 ஆ) 20 இ) 15 ஈ) 21

13. மறியிடைப்படுத்த மான்பிணைப்போல் மகனை நடுவனாகக் கொண்டு தலைவனும் தலைவியும் வாழ்ந்திருக்கின்ற செய்தியைக் கூறும் நூல்
அ) பரிபாடல் ஆ) பட்டினப்பாலை இ) முல்லைப்பாட்டு ஈ) ஐங்குறுநூறு

14. கதிரவன் மகன் ----------
அ) அனுமன் ஆ) சுக்ரீவன் இ) வீடணன் ஈ)குகன்

**II. எவையேனும் மூன்றனுக்கு விடையளி:** **3 x 2 = 6**

15. *நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.*
16. *'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' – யார்க்கு?*
17. *செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?*
18. *எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?*

**III. எவையேனும் இரண்டனுக்கு விடையளி:** **2 x 2 = 4**

19. *அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?*
20. *சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?*
21. *மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக்கொண்டிருக்கிறான் —— இரு தொடர்களாக்குக.*

**IV. எவையேனும் ஏழனுக்கு விடையளி:** **7 x 2 = 14**

**22. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க. (1 மட்டும்)**
அ) *எலியும்பூனையும்போல* ஆ) *அச்சாணி இல்லாத தேர்போல*

**23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைக்க (1 மட்டும்)**
அ) *விலை, விளை, விழை* ஆ) தலை , தளை, தழை

**24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**
அ) *மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.*
ஆ) *என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.*

**25. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**
அ) *மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.*
ஆ) *இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்*

**26. சொல்லை சேர்த்தும் பிரித்தும் எழுதுக.**
அ) தாமரை ஆ) *வெங்காயம்*

**27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**
அ) *புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.*
ஆ) *ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.*

**28. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக**
அ) *ஆணி அடித்தாற் போல* ஆ) *கண்துடைப்பு*

**29. இலக்கணக் குறிப்பு எழுதுக. (1 மட்டும்)**

அ) வியர்வை வெள்ளம் ஆ) உயர்ந்தோர்

**30. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக(1 மட்டும்)**

அ) கலங்கி ஆ) பொலிந்தான்

**31. புணர்ச்சி விதி எழுதுக (1 மட்டும் )**

அ) எத்திசை ஆ) அருங்கானம்

**V. எவையேனும் இரண்டனுக்கு விடையளி:** 2 x 4 = 8

31. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் ——விளக்குக.

32. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக

33.மணலில் எழுதியதுமுதல் தற்காலம்வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

**VI.எவையேனும் இரண்டனுக்கு விடையளி:** 2 x 4 = 8

34. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

35. "மூன்றான காலம் போல் ஒன்று" —— எவை?ஏன்?விளக்குக.

36. குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

**VII.எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x 4 = 12

37. நிரல்நிறை அணியை சான்றுடன் விளக்குக. (அல்லது)

38. பொருள் வேற்றுமை அணியை சான்றுடன் விளக்குக.

**39. இலக்கிய நயம் பாராட்டுக.( நான்கு நயங்கள்) எழுதுக.**

வெட்டி யடிக்குது மின்னல் – கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

- பாரதியார்

**40 .பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புப் படுத்தி எழுதுக.(1 மட்டும்).**

அ) தன் கையே தனக்குதவி ஆ) சிறு துரும்பும் பல்குத்த உதவும்

**41. தமிழாக்கம் தருக.**

In 1977, shocked at the environmental devastation caused by deforestation in her beloved Kenya,Wangari Mathai founded the Green Belt Movement. For thirty years, the movement has enabled many women to plant trees in their regions providing them with food, fuel and halting soil erosion and desertification. She used the movement to enlighten the people on the fruits of representative democracy. This led Kenya to Kenya's first fully democratic elections in a generation. In the election, Mathai was elected to the Parliament and made a Minister of environment. She was conferred a Nobel Prize in 2004 because of her outstanding success in guiding Kenyan women to plant more than thirty million trees. She has transformend the lives of tens of thousands of women through sustainable social forestry schemes.

**42. கவிதையைப் படித்தபின், அக்கவிதை கிளர்த்தும் உணர்வுகள் குறித்து விழிப்புணர்வு உரை ஒன்றை எழுதுக.**

எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
வெறுமணல் பரப்பாய் விரிந்துகிடக்க
ஓணான்கள் முட்டையிட
கள்ளிகள் பிழைத்திருக்க
பிள்ளைகள் விளையாட
பன்றிகள் மேய்ந் திருக்க
வானத்தில் மேகமுண்டு
சூரியனில் மழையுண்டு
காகமோ குருவியோ
வானத்தில் மேகமுண்டு
சூரியனில் மழையுண்டு
காகமோ குருவியோ
நிழல் ஒதுங்க
ஆறெங்கும் முள்மரமுண்டு
எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
ஆற்றுக்கோர் ஊருண்டு
ஊருக்கோர் சனமுண்டு
வாழ்வைப்போல் ஒன்றுண்டு.

- இளங்கோ கிருஷ்ணன்

**VIII.இருபக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3 x 6 = 18

42. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. (அல்லது)

43. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

44. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.(அல்லது)

45. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

46. பொறுப்புணர்ச்சி யின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க . (அல்லது)

47. உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்...... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

**IX. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

48. "குகனோடும் ஐவர் எனத்தொடங்கும் கம்பராமாயணப் பாடல் பாடலை எழுதி பாவகையைக் குறிப்பிடுக.

49. "சினம்.என முடியும் குறட்பாவை எழுதுக.

**வாழ்த்துகள்**

C.VIJAYAKUMAR (PG ASST), BHARATHI VIDHYALAYA MAT.HR.SEC.SCHOOL, GOBICHETTIPALAYAM , CELL:7418693519